பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
29 07 2025 **TUESDAY 6.30 PM**
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய மூன்று தீவிரவாதிகள் நேற்று நடைபெற்ற ஆபரேஷன் மகாதேவ் ராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- Nisar செயற்கைக்கோள் GSLV- F16 ராக்கெட் மூலம் நாளை மாலை விண்ணில் செலுத்தப்படுவதற்கான கவுண்டவுன் இன்று பிற்பகல் தொடங்கியது.
- இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்ட 14 மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.
- தேனீர் கடைகள் மற்றும் சிற்றுண்டிக் கடைகளுக்கு 500 ரூபாய் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரை உரிமக்கட்டணம் வசூலிப்பதை மாநில அரசு கைவிட வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
- *Macau* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Priya Devi - Shruti Mishra இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய மூன்று தீவிரவாதிகள் நேற்று நடைபெற்ற ராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று பேசிய திரு அமித் ஷா, இந்திய ராணுவம், மத்திய ரிசர்வ் காவல்படை மற்றும் ஜம்மு காஷ்மீர் காவல்துறை இணைந்து மேற்கொண்ட ஆபரேஷன் மகாதேவ் ராணுவ நடவடிக்கையின்போது இவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்தார்.

அவர்களிடமிருந்து 3 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த மூவரும் அடையாளம் காணப்பட்டுவிட்டதாக தெரிவித்த அமைச்சர், அவர்களின் பெயர்கள் சுலைமான் ஷா, ஜிப்ரான், ஹமாஸ் ஆப்கானி என்றும் கூறினார்.

இதில் சுலைமான் என்ற தீவிரவாதி ஏ பிரிவில் உள்ள முக்கிய தீவிரவாதி என்றும், பஹல்காம் மற்றும் ககான்கீர் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய நபர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான ஆதாரங்கள் புலனாய்வு அமைப்புகளிடம் உள்ளதாகவும் அவர் தெளிவுபடுத்தினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின்போது அப்பாவி சுற்றுலாப்பயணிகள் ஈவு இரக்கமற்ற முறையில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கைக்கு அனுமதி அளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த கொடூர தாக்குதல் சம்பவம் நடைபெற்ற உடனேயே பாதுகாப்புப் படையினருக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, அவர்கள் இந்திய எல்லையைவிட்டு கடந்து சென்று விடாமல் தடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

துல்லிய தாக்குதலின்மூலம், நாட்டின் முப்படையினரும் இணைந்து பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாத கட்டமைப்புகளை அழித்ததாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

Nisar செயற்கைக்கோள் GSLV- F16 ராக்கெட் மூலம் நாளை மாலை விண்ணில் செலுத்தப்படுவதற்கான கவுண்டவுன் இன்று பிற்பகல் தொடங்கியது.

இது ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து செலுத்தப்படும் 102-ஆவது ராக்கெட்டாகும்.

ஜிஎஸ்எல்வி செயற்கைக்கோளின் 18-ஆவது பயணமாகும்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 12-ஆவது க்ரையோஜெனிக் என்ஜின் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்ட ராமநாதபுரத்தை சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தடையின்றி கைது செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரின் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கு மன ரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை சிறைகளில் தற்போதுள்ள 68 மீனவர்கள் மற்றும் 235 மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க தூதரக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரை வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தேனீர் கடைகள் மற்றும் சிற்றுண்டி கடைகளுக்கு 500 ரூபாய் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரை உரிமக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கிராமப்புறங்களில் இயங்கிவரும் தேனீர் கடைகளில் மாத வருமானம் மிக குறைந்த அளவில் இருக்கும் நிலையில், உரிமக்கட்டணம் என்ற பெயரில் பெரியத் தொகையை செலுத்துவது அவர்களுக்கு நிதிச்சுமையை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

உழைக்கும் வர்க்கத்தின்மீதான வன்முறை, விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு போன்றவை சிற்றுண்டிக் கடைகளை மிகவும் பாதிப்பதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

விருதுநகர் மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள சதுரகிரியில் காட்டுத்தீ பற்றி எரிகிறது.

தீயை அணைக்கும் பணியில் 20-க்கும் மேற்பட்ட வனத்துறையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Sound Byte - கமலக்கண்ணன் -41 Sec.)*

<<<<<<>>>>>>

தமிழகம் மற்றும் புதுவையில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(‘Sound Byte - செந்தாமரை கண்ணன் - 40 Sec.)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு Game Developer உள்ளிட்ட பயிற்சிகளை வழங்குவதற்காக தமிழக திறன் மேம்பாட்டுக்கழகத்திற்கும், Google மற்றும் Unity நிறுவனங்களுக்கும் இடையே துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

-----------

தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்ட மேலாளராக திரு ஷைலேந்திர சிங் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

-----------

கொள்ளிடம் ஆற்றில் அதிக அளவில் உபரி நீர் செல்வதால் கரையோரப்பகுதிகளில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு முன்னேற்பாட்டுப்பணிகளை அரியலூர் மாவட்ட ஆட்சியர் திரு ரத்னசாமி இன்று ஆய்வு செய்தார்.

-----------

நாமக்கல் மாவட்டம் பாச்சல் பகுதியில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த கண்காட்சியை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி திறந்து வைத்தார்.

-----------

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தாட்கோ மூலமாக வீட்டு சுகாதார உதவியாளர் பயிற்சி வழங்கப்பட உள்ளதாக ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

-----------

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், நாளை மறுநாள் நடைபெறும் என்று ஆட்சியர் திரு மோகன சந்திரன் தெரிவித்துள்ளார்.

-----------

திருச்சி ஆர் டி ஓ அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் இன்று நடத்திய சோதனையில் ஒரு லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

-----------

நீலகிரி மாவட்டம் குன்னூரில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த கடையை உணவு பாதுகாப்புத்துறையினர் ஆய்வு செய்து அபராதம் விதித்தனர்.

-----------

சேலம் மாவட்ட வனத்துறை மற்றும் பெரியார் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் அறிவியல் துறை சார்பில் சர்வதேச புலிகள் தின நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-----------

உதகமண்டலம் வனக்கோட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில், பொதுமக்களுக்கு புலிகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

-----------

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் இயற்கையை பாதுகாப்போம் - ஆரோக்கியத்தை மேம்படுத்துவோம் - நட்பை வளர்ப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

-----------

கும்பகோணம் அரசு கவின் கலைக்கல்லூரியில் ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் இயங்குப்பட வடிவமைப்பு மற்றும் காட்சிவழி தொடர்பு ஆகிய இரண்டு பிரிவுகளில் புதிதாக நான்காண்டு இளங்கலை பட்டப்படிப்புகளுக்கு அடுத்த மாதம் 9-ஆம் தேதிக்குள் www.artandculture.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

*Macau* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Priyadevi Konjengbam - Shruti Mishra இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-15, 16-21, 21-17 என்ற செட் கணக்கில், தைவானின் Ling Zih Huang – Szu Min Wang இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் சிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் இணை, 21-13, 21-15 என்ற செட் கணக்கில், மலேசியாவின் 'Hang Yee low – Eng Cheong Ng இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

-----------

*தாய்லாந்தில் நடைபெற்ற உலக Sepak Takraw சாம்பியன் போட்டியில் இந்தியா 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

<<<<<<>>>>>>